www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

KK11T

# தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்
# இரண்டாம் திருப்புதல் தேர்வு - பிப்ரவரி 2023

-----

16-02-2023.

## வகுப்பு 11
## பொதுத்தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

**குறிப்பு:** விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு: **i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **14×1=14**

**ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1) கபாடபுரங்களைக் காவு கொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல்கனிமங்கள் - அடிமோனையைத் தெரிவு செய்க.
அ) கபாடபுரங்களை - காவுகொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்
இ) கபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத

2) தொல்காப்பியத்தில் உள்ள இயல்களின் எண்ணிக்கை
அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13

3) அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன் - யார்? யாரிடம் கூறியது?
அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்
இ) மன்னர் அமுதவல்லியிடம் ஈ) அமைச்சர் மன்னரிடம்

4) விசித்திரமான தொழில் செய்வது
அ) வாய்க்கால் ஆ) மழை இ) அலைகடல் ஈ) புல்

5) கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை ............
அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப் பொருள்கள்
இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு

6) ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ............. என்பதாகும்.
அ) தாள் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) நூல்

7) ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாதது எது?
அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

8) 'தா' என்ற வேர்ச்சொல்லின் வினைமுற்று யாது?
அ) தந்தான் ஆ) தந்த இ) தந்துவிட்டான் ஈ) தந்தவன்

9) ஆசிரியராக்கினார் - இதன் பகுதி
அ) ஆக ஆ) ஆசிரியராக்கு இ) ஆசிரி ஈ) ஆசி

10) இவற்றை எரித்தால் போதும் - ஓர் இனத்தை அழித்து விடலாம்.
அ) துணிகளை ஆ) நூல்களை இ) உடைமைகளை ஈ) ஆவணங்களை

11) ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.
அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாளர் ஈ) ஆசிரியர்

12) சிம்பொனி என்னும் மேற்கத்திய செவ்வியல் இசை அமைக்க இளையராஜா எடுத்துக்கொண்ட காலம்
அ) 6 மாதங்கள் ஆ) 15 நாள்கள் இ) 13 நாள்கள் ஈ) 16 நாள்கள்

13) 'யானை டாக்டர்' என்னும் குறும்புதினத்தின் ஆசிரியர் .............
அ) எஸ். இராமகிருஷ்ணன் ஆ) ஜெயமோகன்
இ) சிவராமன் ஈ) சு. வேணுகோபால்

14) பின்வருவனவற்றுள் பொருந்தாத இணையைத் தேர்க.
அ) அன் - வந்தனன் ஆ) இன் - முறிந்தது
இ) கு - காண்குவன் ஈ) அன் - சென்றன

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



## பகுதி - II

### பிரிவு - 1

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக:** **3×2=6**

15) இனம், மொழி ஆகியன குறித்து இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

16) நாவை ஏன் காக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்?

17) மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றை உறுதிப்படுத்துக.

18) 'ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள?' - இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×2=4**

19) பேச்சுமொழி எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது. ஏன்?

20) பிற்காலச் சோழர்களின் தனி அடையாளம் எது?

21) நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக:** **7×2=14**

22) **தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக:**
ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்

23) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**
கனை, கணை (அல்லது) பொரி, பொறி

24) **அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்கு உரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக:**
அ) வந்தால் மகிழ்ச்சி இது; உழைத்தால் கிடைக்கும் இது. (மானம்)
ஆ) அறிவைத் தேடிப் போகும் இடம்; உலகம் அறிய உதவும் இடம். (அகம்)

25) **மெய்ப்புத் திருத்தக் குறியீடுகளுக்கு உரிய பொருளைத் தருக:**
அ) # ஆ) Dt

26) **உறுப்பிலக்கணம் தருக:**
ஈன்ற (அல்லது) நின்றார்

27) **புணர்ச்சி விதி தருக:**
சிறுகோல் (அல்லது) உழுதுழுது

28) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:**
அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.

29) கலைச்சொல்லாக்கம் - **பொருள் தருக.**

30) உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?

## பகுதி - III

### பிரிவு - 1

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக:** **2×4=8**

31) "சலச வாவியில் செங்கயல் பாயும்" - **இடம்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

32) தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் மாணவர்களின் பண்புநலன்களைக் கூறுக.

33) சிங்கி பெற்ற பரிசுப் பொருள்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?

34) வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக:** **2×4=8**

35) மூன்றாம் வகை கவிஞர் பற்றி இந்திரன் கூறுவதை விவரி.

36) மலை, மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரி.

37) ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.

38) தாமஸிகம் என்றால் என்ன?

## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக:** **3×4=12**

39) சொற்பொருள் பின்வருநிலை அணியைச் சான்றுடன் விவரி.

**(அல்லது)**

இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

**- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக.**

40) **விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக:**

அ) தனிமொழி - அறிவு ; .............. - வண்ணமயில் ; பொதுமொழி - ..............

ஆ) கார்காலம் - .......... ; குளிர்காலம் - ஐப்பசி, கார்த்திகை ; .......... - மார்கழி, தை.

இ) எழுத்து, சொல், .............., யாப்பு, ..............


ஈ) சேரன் - வில், சோழன் - .............., .............. - மீன்.

41) **கீழ்க்காணும் பாடலைப் படித்து, அதன் மையக்கருத்தை எழுதி, ஏதேனும் மூன்று நயங்களை எழுதுக:**

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.

**- நாமக்கல் கவிஞர்**

42) **கருத்துப்படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக:**




43) **தமிழாக்கம் தருக:**

அ) The pen is mightier than the sword.

ஆ) Looking at beauty in the world is the first step of purifying the mind.

இ) You must be the change you wish to see in the world.

ஈ) Nobody can hurt me without my permission.

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



43) **காதுகேளாதோருக்கான மாற்று வினா:**

''வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்'' என்னும் வலுவான ஒற்றை வரியை நமக்குள் அழுத்தமாக பதியச் செய்தவர் திருவருட்பா தந்த வள்ளலார். அவர் அமைதி, அன்பு வழியிலான சமூகத்தை உருவாக்க விரும்பினார். ஏழு வயதிலேயே கவிபாடும் வல்லமை பெற்று தெய்வமணிமாலை. கந்தர் சரவணப்பத்து ஆகிய நூல்களை உருவாக்கினார். அவர் சாதி, சமய, மத வேறுபாடுகள் கடந்து, அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு பாராட்டச் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தைத் தோற்றுவித்தார். தெய்வங்கள் பல எனச் சொல்லும் உருவ வழிபாட்டை மறுத்தார்.

**வினாக்கள்:**

அ) 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று கூறியவர் யார்?

ஆ) வள்ளலார் எத்தனை வயதில் கவிபாடும் ஆற்றல் பெற்றார்?

இ) வள்ளலார் தோற்றுவித்த சங்கத்தின் பெயர் யாது?

ஈ) வள்ளலார் எத்தகைய வழிபாட்டை மறுத்தார்?

## பகுதி - 4

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக:** **3×6=18**

44) அ) கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழி நிறுவுக. **(அல்லது)**

ஆ) பாரதிதாசன் ஒரு புரட்சிக்கவி என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

45) அ) 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.

**(அல்லது)**

ஆ) சுந்தரராமசாமியின் 'காற்றில் கலந்த பேரோசை' என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

46) அ) சிம்பொனித் தமிழர் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை உங்கள் பாடப்பகுதி கொண்டு தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) வாடிவாசல் கதை வாயிலாய் நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:** **4+2=6**

47) அ) 'உடை அணிந்தேன்' எனத் தொடங்கும் 'தொலைந்து போனவர்கள்' பாடலை எழுதுக.

ஆ) 'செயின்' என முடியும் குறட்பாவை எழுதுக.

SIVAKUMAR M, Sri Ramanat HSS, Vallam 627809, Tenkasi District

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com